## தேர்ச்சி 2.0 : கேள்வி, நிரம்பல், நெகிழ்ச்சி மற்றும் சந்தைச் சமநிலையைப் பற்றிப் பகுப்பாய்வு செய்வார்.

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- **மிகப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.**

---

**1.** அ. விருப்பம்
ஆ. கொள்வனவுச் சக்தி
இ. குறித்த பண்டத்தின் விலை
ஈ. கொள்வனவு செய்வதற்கான ஆயத்தம்

மேலே தரப்பட்ட காரணிகளில் காரணிகள் **கேள்வியேற்படுவதில்** செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் எவை
(1) அ,ஆ மட்டும் (2) அ,இ மட்டும் (3) அ,ஈ. மட்டும் (4). அ,ஈ,இ மட்டும் (5) அ,ஆ,ஈ மட்டும்

**2.** தனிநபர் கேள்வியைத் தீர்மானிக்கின்ற காரணிகளுக்கு மேலாகச் **சந்தைக் கேள்வியைத்** தீர்பானிப்பதில் செல்வாக்குச் செலுத்துகின்ற காரணி எது
(1) குறிப்பிட்ட பண்டத்தின் விலை
(2) நுகர்வோரின் வருமானம்
(3) நுகர்வோனின் சுவை
(4) எதிர்காலம் பற்றிய எதிர்பார்க்கைகள்
(5) நுகர்வோர் தொகையும் அதன் கட்டமைப்பும்

**3.** கேள்வி விதியின் எடுகோளாகக் கருதப்பட **முடியாதது.**
(1) குறிப்பிட்ட சந்தர்ப்பம் ஒன்றில் விலையும் கேள்வித் தொகையும் கருத்திற் கொள்ளப்படல்.
(2) விலைத் தவிர்ந்த கேள்வியைப் பாதிக்கும் ஏனையக் காரணிகள் மாற்றமின்றியிருத்தல்.
(3) சாதாரண பண்டமொன்றின் கேள்வி கருத்திற் கொள்ளப்படல்.
(4) கேள்வியைத் தீர்மானிக்கும் அனைத்துக் காரணிகளும் மாற்றமடையாது.
(5) பகுத்தறிவுள்ள கொள்வனவாளரின் நடத்தை கருத்திற் கொள்ளப்படல்.

**4.** கேள்வியில் செல்வாக்குச் செலுத்தும் ஏனைய காரணிகள் மாறாதிருக்க குறிப்பிட்ட பண்டத்தின் விலை அதிகரித்தல் அல்லது குறைதலை அடிப்படையாகக் கொண்டு அதன் சார்பு விலைகள் கூடுதல் அல்லது குறைதல் காரணமாக குறிப்பிட்ட பண்டத்துக்கான கேள்வித் தொகை மாற்றமடைவது
(1) கேள்வி விதியாகக் கருதப்படும்
(2) விலைமாற்றத்தின் விளைவாகக் கருதப்படும்.
(3) விலை மாற்றமொன்றின் பிரதியீட்டு விளைவாகக் கருதப்படும்
(4) விலை மாற்றமொன்றின் வருமான விளைவாகக் கருதப்படும்
(5) கேள்வி மாற்றமாகக் கருதப்படும்.

**5.**பின்வரும் எந்நிலைமையின் கீழ் கேள்வித் தொகையில் ஒடுக்கம் ஏற்படும்
(1) சாதாரண பண்டமொன்றின் விலை வீழ்ச்சியடைதலின் போது பிரதியீட்டு விளைவும் வருமான விளைவும் நேர்ப் பெறுமதியைப் பெறுவதன் அடிப்படையில்
(2) சாதாரண பண்டமொன்றின் விலை அதிகரித்தலின் காரணமாகப் பிரதியீட்டு விளைவு மற்றும் வருமான விளைவு மறைப் பெறுமதியைப் பெறுவதன் அடிப்படையில்.
(3) குறித்த பண்டத்தின் கேள்வியைத் தீர்மானிக்கும் காரணிகளில் விலை தவிர்ந்த ஏனைய காரணிகளில் ஏற்படும் சாதகமான மாற்றம் காரணமாக
(4) குறித்த பண்டத்தின் கேள்வியைத் தீர்மானிக்கும் காரணிகளில் விலை தவிர்ந்த ஏனைய காரணிகளில் ஏற்படும் பாதகமான மாற்றம் காரணமாக
(5) குறித்த பண்டத்தின் கேள்வியைத் தீர்மானிக்கும் காரணிகளில் விலை உள்ளடங்கரான அனைத்துக் காரணிகளில் ஏற்படும் மாற்றம் காரணமாக

**6.** பின்வருவனவற்றுள் கேள்விக் கோடு வரையும் போது நிலையாகவுள்ளதாகக் கருதப்படாதது எது?
(1) நுகர்வோரின் பணவருமானம்
(2) நுகர்வோரின் சுவை
(3) கருதப்படும் பொருளின் விலை
(4) பதிலீடுகளின் விலைகள்
(5) நிரப்புப்பொருளின் விலைகள்

**7.** கேள்வி விதிக்கு முரணான சந்தர்ப்பங்களாகக் கருதப்படும் மிகப் பொருத்தமானவை எவை
(1) கிபன் பண்டம் ,காட்சிப் பண்டம்
(2) கிபன் பண்டம் ,சாதாரண பண்டம்
(3) சாதாரண பண்டம் ,காட்சிப் பண்டம்
(4) சாதாரண பண்டம் ,வெப்லன் பண்டம்
(5) இழிவுப் பண்டம், கிபன் பண்டம்

**8.** இழிவுப் பொருள் மற்றும் கிபன் பொருள் என்பன தொர்பாக மிகவும் சரியான கூற்று எது?
(1) கிபன்பண்டம் எல்லாம் இழிவுப்பண்டம் ஆனால் இழிவுப்பண்டம் எல்லாம் கிபன்பண்டம் அல்ல
(2) குறித்த பொருளின் வருமானம் அதிகரிக்கும் போது அப்பண்டத்தின் கேள்வி அதிகரிக்குமாயின் அது இழிவுப்பண்டம் ஆனால் விலை அதிகரிக்கும் போது குறித்தபண்டத்தின் கேள்வித்தொகை குறைவடையுமாயின் அது கிபன்பண்டம் ஆகும்.
(3) இழிவுப் பண்டத்தின் விலைசார்கேள்வி நெகிழ்ச்சி நேர்க்கணியமாகும் ஆனால் கிபன்பண்டத்தின் விலைசார்கேள்வி நெகிழ்ச்சி எதிர்க்கணியமாகும்
(4) இழிவுப்பண்டம் எல்லாம் கிபன்பண்டம் ஆனால் கிபன்பண்டம் எல்லாம் இழிவுப்பண்டம் அல்ல
(5) இரண்டுக்கும் விலைசார் கேள்வி நெகிழ்ச்சி நேர்கணியம் ஆனால் வருமானம் சார் கேள்வி நெகிழ்ச்சி எதிர்க்கணியம்.

**9.** $QD_X=f(P_X)$ என்னும் சார்புக்கான பிரதான எடுகோள்கள் இரண்டும் எவையெனத் தெரிவு செய்க.
(1) குறித்த பண்டத்தின் விலை மாற்றமடையாது கேள்வியைத் தீர்மானிக்கும் ஏனைய காரணிகள் மாற்றமடையும்
(2) குறித்த பண்டத்தின் விலை மாற்றமடையும் கேள்வியைத் தீர்மானிக்கும் ஏனைய காரணிகள் மாற்றமடையாது.
(3) குறித்தபண்டத்தின் விலையும் கேள்வியைத் தீர்மானிக்கும் ஏனையகாரணிகளும் மாற்றமடையாது.
(4) குறித்தபண்டத்தின் விலையும் கேள்வியைத் தீர்மானிக்கும் ஏனையகாரணிகளும் மாற்றமடையும்.
(5) காலம் குறுங்காலம் இக் குறுங்காலத்தில் விலைமாறாது ஏனைய காரணிகள் மாற்றமடையும்.

**10.** சாதாரண பண்டம் ஒன்றின் கேள்விக்கோடு இடதுபுறமாக நகர்வதற்கு அடிப்படையான காரணத்தைத் தெரிவு செய்க
(1) நுகர்வோன் சுவை அதிகரித்தல்
(2) எதிர்காலத்தின் விலை அதிகரிக்கும் என எதிர்பார்த்தல்
(3) கொள்வனவாளரின் எண்ணிக்கை அதிகரித்தல்
(4) இணைப்பு பண்டங்களின் விலை அதிகரித்தல்
(5) குறித்த பண்டத்தின் விலை அதிகரித்தல்.

**11.** குறித்த காலப்பகுதியில் ஏனையவை மாறாத போது குறித்த சந்தையில் பத்து தனிப்பட்ட கொள்வனவாளர்கள் வேறுபட்ட கேள்வி வளையிகளுடன் காணப்படுகின்றனர். இச்சந்தையில்சந்தைச் சமனிலையைத் தீர்மானிப்பதற்குமேற்கொள்ள வேண்டியமதிப்பீடாக அமைவது .
(1) ஒவ்வொரு விலைகளிலுமான தனிப்பட்டவர்களினதும் கேள்விகளை கூட்டுதல் வேண்டும்.
(2) ஒவ்வொரு விலைகளிலுமான தனிப்பட்டவர்களினதும் கேள்விகளை சராசரிப்படுத்தல்
(3) விலைசார் கேள்வி நெகிழ்ச்சியினையும் நிரம்பல் நெகிழ்ச்சியினையும் ஒப்பீடு செய்தல்
(4) விலைசார் கேள்வி நெகிழ்ச்சியினை மதிப்பிட்டு கேள்வித்தொகையை அதனால் பெருக்குதல் வேண்டும்.
(5) பல்வேறுபட்ட விலைகளிலான தனிப்பட்டவர்களின் கேள்விகளைத் தனித்தனியே கூட்டுதல் வேண்டும

**12.** ஏதாவதொரு பண்டத்தின் விலை மாற்றமடையும் சதவீதத்தை விட குறைந்த சதவீதத்தில் அப்பண்டத்தின் கேள்வித்தொகை மாற்றமடையுமாயின் அது
(1) நெகிழ்வற்ற கேள்வியாகும். (2) நெகிழ்ச்சியுள்ள கேள்வியாகும் (3) முடிவிலி கேள்வி நெகிழ்ச்சி
(4) பூச்சிய கேள்வி நெகிழ்ச்சி (5) அலகுக் கேள்வி நெகிழ்ச்சி

**13.** விலைக் கேள்வி நெகிழ்ச்சியைத் தீர்மானிக்கும் காரணிகள் **அல்லாதது.**
(1) குறிப்பிட்ட பண்டத்தின் ஆடம்பரத்தன்மையும் அத்தியாவசியத் தன்மையும்
(2) பண்டமொன்றுக்குக் காணப்படும் பிரதியீடுகளின் தொகையும் அவற்றின் கிட்டிய தன்மையும்
(3) நுகர்வோன் வருமானத்தில் பண்டத்தைக் கொள்வனவு செய்வதற்குச் செலவிடப்படும் அளவின் முக்கியத்துவம்
(4) பண்டத்தின் உற்பத்திக்கும் களஞ்சியப்படுத்தலுக்கும் எடுக்கும் காலம்
(5) விலை மாற்றத்துக்கு ஏற்பத் தம்மை இயைபாக்கிக் கொள்வதற்குச் செல்லும் காலம்

**14.** குறித்த பண்டத்தின் விலை 10ரூபாவிலிருந்து 15ரூபாவாக அதிகரித்த போது கேள்வித்தொகை 40% ஆல் குறைவடைந்தது எனின்விகிதாசார அடிப்படையில் கேள்வி நெகிழ்ச்சியை மதிப்பிட்டால் அது
(1) ஒன்றிலும் கூடிய கேள்வி நெகிழ்ச்சியாகும்
(2) ஒன்றிலும் குறைந்த கேள்வி நெகிழ்ச்சியாகும்

(3) ஒன்றிற்கு சமமான கேள்வி நெகிழ்ச்சியாகும்
(4) முடிவிலி கேள்வி நெகிழ்ச்சியாகும்
(5) பூச்சிய கேள்வி நெகிழ்ச்சியாகும்

**15.** குறித்த பண்டத்தின் கேள்வி நெகிழ்ச்சி ஒருமை நெகிழ்ச்சியாகக் காணப்பட்டது இப்பண்டத்தின் விலை அதிகரிக்குமாயின் நிறுவனத்தின் சராசரி வருமானம்
(1) அதிகரிக்கும்
(2) குறையும்
(3) பூச்சியமாகக் காணப்படும்
(4) ஒன்றிற்குச் சமமாகக் காணப்படும்
(5) நிச்சயத்துக் கூறமுடியாது.

**16.**நெழிச்சியுடைய பண்டம் ஒன்றின் சந்தை நிரம்பல் குறைவடைகின்றது எனின் இப் பண்டத்தின் உற்பத்தியாளன் வருமானம்
(1) அதிகரிக்கும்
(2) குறையும்
(3) மாறாது
(4) பூச்சியமாகும்
(5) நிச்சயத்துக் கூறமுடியாது.

**17.** இரண்டு பண்டங்களுக்கிடையேயான குறுக்குக் கேள்வி நெகிழ்ச்சி நேர்கணியமாயின் அவை
(1) பதிலீட்டுப் பொருட்கள் ஆகும்
(2) நிரப்புப் பொருட்கள் ஆகும்
(3) அத்தியாவசியப் பொருட்கள் ஆகும்
(4) ஆடம்பரப் பொருட்கள் ஆகும்
(5.) கிபன் பொருட்கள் ஆகும்.

**18.** வருமானம் சார் கேள்வி நெகிழ்ச்சி நேர்க்கணியமாயின் அப்பண்டம்
(1) கிபன் பண்டம் (2) சாதாரண பண்டம் (3) இழிவுப் பண்டம்
(4) பதிலீட்டுப் பண்டம் (5) நிரப்புப் பண்டம்

**19.** காருக்கும் பெற்றோலுக்குமான குறுக்குக் கேள்விநெகிழ்ச்சி
(1) நேர்கணியம் (2) எதிர்க்கணியம் (3) பூச்சியம்
(4) ஒன்றிலும் கூட (5) ஒன்றிலும் குறைய

**20.** பாலிற்கான வருமானம் சார் கேள்வி நெகிழ்ச்சி +2 எனின் பாலின் நுகர்வோர் வருமானம் அதிகரித்தால்
(1) பாலின் கேள்வி மாறாது
(2) பாலின் கேள்வி குறைவடையும்
(3) பாலின் கேள்வி அதிகரிக்கும்
(4) பாலிற்கும் நுகர்வோர் வருமானத்திற்கும் தொடர்பு இல்லை
(5) தயிரின் வருமானம் சார் கேள்வி நெகிழ்ச்சியும் +2 ஆகக் காணப்படும்.

**21.** பின்வரும் நிறுவனங்களில் சந்தை ஆதிக்கத்தைச் செலுத்தக் கூடிய நிறுவனம் எது

| நிறுவனம் | விலைசார் கேள்வி நெகிழ்ச்சி |
|---|---|
| (1) A | -0.25 |
| (2) B | - 1.0 |
| (3) C | -1.5 |
| (4) D | -2.0 |
| (5) E | -2.5 |

**22.** சினிமாவுக்கான விலை சார் கேள்வி நெகிழ்ச்சி ஒருமை நெகிழ்ச்சியாகக் காணப்பட அதன் நுழைவுக் கட்டணத்திற்கான விலை 200ரூபாவிலிருந்து 250 ரூபாவாக மாற்றமடைந்தது எனின் சினிமாக் கம்பனியின் வருமானம்.
(1) 25% ஆல் அதிகரிக்கும் (2) 25% குறைவடையும் (3) 50% ஆல் அதிகரிக்கும்
(4) 50% ஆல் குறைவடையும் (5) மாற்றமடையாது.

**23.** பின்வரும் கூற்றுக்களில் மிகவும் சரியான கூற்றினைத் தெரிவு செய்க
(1) விவசாயப் பொருட்களின் விலை அதிகரிக்கும் போது அவற்றின் நிரம்பல் அதிகரிக்கலாம்.
(2) விவசாயப் பொருட்களின் கேள்வி நெகிழ்வுள்ளதாக அமையுமாயின் பொருளின் நிரம்பல் அதிகரிக்குமாயின் நிரம்பலாளன் வருமானம் வீழ்ச்சியடையலாம்.
(3) விவசாயப் பொருட்களின் கேள்வி நெகிழ்வற்றதாக அமையுமாயின் பொருளின் நிரம்பல் வீழ்ச்சியடையுமாயின் நிரம்பலாளன் வருமானம் வீழ்ச்சியடையலாம்.
(4) விவசாயப் பொருட்களின் கேள்வி நெகிழ்வற்றதாக அமையுமாயின் விலை அதிகரிக்கும் போது கேள்வித் தொகை அதிகரிக்கும்.
(5) விவசாயப் பொருட்களின் கேள்வி நெகிழ்வற்றதாக அமையுமாயின் பொருளின் சந்தை நிரம்பல் அதிகரிப்பதால் நிரம்பலாளன் வருமானம் வீழ்ச்சியடையலாம்.

**24.** காருக்கான கேள்வி மற்றும் நிரம்பல் சமநிலையிலுள்ளது எனக் கருதுக.பெற்றோலின் விலையில் ஏற்படும் ஓர் பாரியளவிலான குறைவும் காரின் உற்பத்திச் செலவில் ஏற்படும் ஓர் அதிகரிப்பும் ஓரே சமயத்தில் இடம் பெறுமாயின் பின்வருவனவற்றுள் எது சாத்திய மானது.
(1) சமநிலை விலை அதிகரிக்கும் , சமநிலைத் தொகை அதிகரிக்கும்.
(2) சமநிலை விலை குறைவடையும் , சமநிலைத் தொகை அதிகரிக்கும்.
(3) சமநிலை விலை அதிகரிக்கும் , சமநிலைத் தொகை குறைவடையும்.
(4) சமநிலை விலை குறைவடையும் , சமநிலைத் தொகை குறைவடையும்.
(5) சமநிலை விலை அதிகரிக்கும் , சமநிலைத் தொகை பற்றி நிச்சயித்துக் கூறமுடியாது.

**25.** கீழ்வரும் அடிப்படையில் வேறுபட்ட ஐந்து பொருட்களுக்கு இரு வருமான மட்டங்களில் நுகர்வோன் கொள்வவினைக் காட்டுகின்றது

| வருமானம் | கேட்டகப்பட்ட அளவு எண்ணிக்கை | | | | |
|---|---|---|---|---|---|
| | பொருள்1 | பொருள்2 | பொருள்3 | பொருள்4 | பொருள்5 |
| 40000 | 200 | 200 | 200 | 200 | 200 |
| 48000 | 280 | 260 | 240 | 200 | 000 |

வருமானம் 40000 ரூபாவிலிருந்து 48000 ஆக அதிகரிக்கும் போது எந்தப் பொருள் **ஒருமை** வருமானக் கேள்வி நெகிழ்ச்சியை உடையது.
(1) பொருள் 1 (2) பொருள் 2 (3) பொருள் 3 (4) பொருள் (5) பொருள் 5

**26.** நிரம்பல் வளையி ஒன்று வரையப்படும் போது எது மாறிலியாக இருக்காது.
(1) குறிப்பிட்ட பொருளின் விலை (2) தொடர்புடைய ஏனையபொருட்களின் விலை
(3) உற்பத்திக்கான மூலப் பொருளின் விலை (4) உற்பத்திக் காரணிகளின் விலை
(5) உற்பத்தியாளன் எதிர்பார்க்கை

**27.** குறித்த பண்டத்தின் நிரம்பல் கோடு $S_1$-$S_2$ என நகர்வடைவதற்குப் பொறுப்பாக அமையக் கூடிய காரணி




(1) கூலி மட்டத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு
(2) நுகர்வோன் மீதான வரி விதிப்பு நீக்கப்படல்
(3) புதிய நிறுவனங்கள் சந்தையில் உட்பிரவேசித்தல்
(4) விற்பனைகள் மீது விதிக்கப்பட்டிருந்த வரிகள் குறைக்கப்படல்
(5) உற்பத்தியாளனுக்கு வழங்கிய மானியங்கள் குறைக்கப்படல்

**28.** பின்வருவனவற்றுள் எது சாத்தியமானது என நெகிழ்ச்சியின் துணை கொண்டு தெரிவு செய்க
(1) X கம்பனியின் விற்பனை வருவாய் விலை அதிகரித்த போது அதிகரித்தது எனின் இது கட்டாயம் ஒருமை நெகிழ்ச்சியுடைய பண்டமாகும்

(2). தற்போதுள்ள விலையில் நிறுவனத்தின் விற்பனை வருவாய் உச்சப்படுத்தப்படும் அதேவேளை விலை மாற்ற மடையினும் வருமானம் மாற்றமடையவில்லை எனின் கட்டாயம் ஒருமை நெகிழ்ச்சியுடைய பண்டமாகும்.
(3) குறுக்குக் கேள்வி நெகிழ்ச்சி நேர்கணியத்தில் ஒன்றிலும் அதிகமாகக் காணப்படுமாயின் அவ் நிறுவனம் விற்பனை செய்யும் பண்டங்களுக்கு நெருங்கிய பதிலீடுகள் எதுவும் இல்லை
(4) நேர்போட்டு வழியான கேள்விக்கோட்டின் வழியே சரிவு மாற்றமடைவதாலேயே நேர்கோட்டின் வழியே புள்ளிக்கு புள்ளி நெகிழ்ச்சிக்குணகப்பெறுமி வேறுபடுகின்றது.
(5) ஒருமைக் கேள்வி நெகிழ்ச்சியுடைய பண்டத்தின் விலை குறைவடையுமாயின் நிறுவனத்தின் விற்பனை வருவாய் அதிகரிக்கும்.

**29.** குறித்த பண்டத்தின் விலை (P) மற்றும் நுகர்வோன் செலவு(CE) என்பன வருமாறு

| P | CE |
|---|---|
| 10 | 10000 |
| 20 | 5000 |

இப்பண்டத்தின் கேள்விச் சமன்பாடு மற்றும் நுகர்வோர் செலவீட்டடிப்படையில் எவ்வகையான கேள்வி நெகிழ்ச்சியுடைய பண்டம் என்பதனைப் பின்வருவனவற்றிலிருந்து தெரிவு செய்க
(1) Qd =750-75 p ,நெகிழ்ச்சி வாய்ந்த பண்டம்.
(2) Qd =750-75 p ,நெகிழ்ச்சி அற்ற பண்டம்.
(3) Qd =1750-75 p ,நெகிழ்ச்சி அற்ற பண்டம்.
(4) Qd =1750-75 p ,நெகிழ்ச்சி வாய்ந்த பண்டம்.
(5) Qd =15000-500 p ,நெகிழ்ச்சி வாய்ந்த பண்டம்.

**30.** சந்தை நிரம்பல் வளையியின்நகர்வினை ஏற்படுத்தப் பொறுப்பாக அமையாத காரணி பின்வருவனவற்றுள் எது?
(1). உள்ளீடுகளின் விலை மாற்றமடைதல்
(2). உற்பத்திக்கான தொழில்நுட்பம் மாற்றமடைதல்
(3). குறித்த பண்டத்தின் விலை மாற்றமடைதல்
(4). தொடர்புடைய போட்டி நிரம்பல் பண்டத்தின் விலை மாற்றமடைதல்
(5). நிரம்பலாளர் எண்ணிக்கை மாற்றமடைதல்

**31.** பண்டம் A யின் நிரம்பல் சமன்பாடு Qs =100p பண்டம் B ன் நிரம்பல் சமன்பாடுQs =400p ஆகக் காணப்பட்டது.
(1) பண்டம் Aயின் நிரம்பல் நெகிழ்ச்சியின் இரண்டு மடங்காக பண்டம் Bயின் நிரம்பல் நெகிழ்ச்சி காணப்படும்.
(2) பண்டம் Aயின் நிரம்பல் நெகிழ்ச்சியின் அரை மடங்காக பண்டம் Bயின் நிரம்பல் நெகிழ்ச்சி காணப்படும்.
(3) பண்டம் Aயின் நிரம்பல் நெகிழ்ச்சியும் பண்டம் Bயின் நிரம்பல் நெகிழ்ச்சியும் ஒருமை காணப்படும்.
(4) பண்டம் Aயின் நிரம்பல் நெகிழ்ச்சியும் பண்டம் Bயின் நிரம்பல் நெகிழ்ச்சியும் 0.5 ஆகக் காணப்படும்.
(5) பண்டம் Aயின் நிரம்பல் நெகிழ்ச்சியும் பண்டம் Bயின் நிரம்பல் நெகிழ்ச்சியும் இரண்டாகக் காணப்படும்.

**32.** குறித்த பண்டத்தின் நிரம்பல் சமன்பாடு Qs= -1000 + 100 p இப்பண்டத்தின் விலையில் ஒரு தொடர்ச்சியான அதிகரிப்பு ஏற்படுமாயின்
(1) நிரம்பல் நெகிழ்ச்சி ஒன்றிலும் குறைவாகக் காணப்படுவதுடன் படிப்படியாக அதிகரிக்கும்.
(2) நிரம்பல் நெகிழ்ச்சி ஒன்றிலும் குறைவாகக் காணப்படுவதுடன் படிப்படியாக குறைவடையும்
(3) நிரம்பல் நெகிழ்ச்சி ஒன்றிலும் அதிகமாகக் காணப்படுவதுடன் படிப்படியாக அதிகரிக்கும்.
(4) நிரம்பல் நெகிழ்ச்சி ஒன்றிலும் அதிகமாகக் காணப்படுவதுடன் படிப்படியாக குறைவடையும்.
(5) நிரம்பல் நெகிழ்ச்சி ஒன்றுக்குச் சமனாக் காணப்படும்.

**33.** பின்வருவனவற்றுள் எது நிச்சயம் சமநிலை விலை அதிகரிப்புக்கு இட்டுச் செல்லும்.
(1) கேள்வி சிறிதளவால் அதிகரிக்க நிரம்பல் பெருமளவால் அதிகரித்தல்.
(2) கேள்வியும் நிரம்பலும் சம அளவால் அதிகரித்தல்.
(3) கேள்வியும் நிரம்பலும் சம அளவால் குறைவடைதல்.
(4) கேள்வி அதிகரிக்க நிரம்பல் குறைவடைதல்
(5) நிரம்பல் அதிகரிக்க கேள்வி குறைவடைதல்

**34.** குறித்த பண்டத்தின் வருமானம்சார் கேள்விநெகிழ்ச்சி நேர்க்கணியமாகவும் விலைசார் கேள்வி நெகிழ்ச்சி எதிர்கணிய மாகவும் காணப்பட்டது எனின் அப் பண்டம் நிச்சயம் ஒரு
(1) வெப்லன் பண்டம்
(2) கிபன் பண்டம்
(3) இணைப்புப் பண்டம்
(4) நிரப்புப் பண்டம்
(5) சாதாரண பண்டம்

**35.**




நிரம்பல்கோடுS-$S_1$எனவும் கேள்விக்கோடு D-$D_1$எனவும் ஒரே சமயத்தில் நகர்வடைகிக்றது எனின பின்வருவனவற்றில் எது சாத்தியமானது.

(1) உற்பத்திக்காரணிகளின் விலையில் ஏற்படும் குறைவும் பதிலீட்டுப் பண்டங்களின் விலையில் ஏற்பட்ட அதிகரிப்பும்
(2) உற்பத்திக்காரணிகளின் விலையில் ஏற்படும் குறைவும் பதிலீட்டுப் பண்டங்களின் விலையில் ஏற்பட்ட குறைவும்
(3) உற்பத்திக்காரணிகளின் விலையில் ஏற்படும் அதிகரிப்பும் பதிலீட்டுப் பண்டங்களின் விலையில் ஏற்பட்ட அதிகரிப்பும்
(4) உற்பத்திக்காரணிகளின் விலையில் ஏற்படும் குறைவும் நிரப்பு பண்டங்களின் விலையில் ஏற்பட்ட அதிகரிப்பும்
(5) உற்பத்திக்காரணிகளின் விலையில் ஏற்படும் அதிகரிப்பும் நிரப்பு பண்டங்களின் விலையில் ஏற்பட்ட அதிகரிப்பும்

**36.** குறித்த பண்டத்தின் கேள்விச் சமன்பாடு Qd= 6000-100p மிகைக்கேள்விச் சமன்பாடு ED = 7000 -200p எனின் சமநிலை விலை
(1) 43.33 ரூபா (2) 3.33 ரூபா (3) 60 ரூபா (4) 35ரூபா (5) 4.33ரூபா

**37.** குறித்த பண்டத்தின் சமநிலை வருமாறு




சமநிலையில்
(1) கேள்வி நெகிழ்சியும் நிரம்பல் நெகிழ்ச்சியும் சமம்
(2) கேள்வி நெகிழ்சி = -1 நிரம்பல் நெகிழ்ச்சி = 2
(3) கேள்வி நெகிழ்சி = -2 நிரம்பல் நெகிழ்ச்சி = 1
(4) கேள்வி நெகிழ்சி = -2 நிரம்பல் நெகிழ்ச்சி = 4
(5) கேள்வி நெகிழ்சி = -4 நிரம்பல் நெகிழ்ச்சி = 2

**38.** குறித்த பண்டத்தின் கேள்விச் சமன்பாடு Qd =4000-100 p நிரம்பல் சமன்பாடு Qs =100 p ஆகக் காணப்படுகின்றது எனின் சமநிலையில் பின்வரும் கூற்றுக்களில் எது சரியானதாகக் காணப்படும்.
(1) கேள்வி நெகிழ்ச்சியும் நிரம்பல் நெகிழ்ச்சியும் மட்டும் சமமாகக் காணப்படும்
(2) உற்பத்தியாளர் மிகையும் ,நுகர்வோர் மிகையும் மட்டும் சமமாகக் காணப்படும்.
(3) கேள்வி நெகிழ்ச்சியும் நிரம்பல் நெகிழ்ச்சியும் சமமாகக் காணப்படும்ஆனால் உற்பத்தியாளர் மிகையும் ,நுகர்வோர் மிகையும் சமமாகக் காணப்படாது.
(4) உற்பத்தியாளர் மிகை ,நுகர்வோர் மிகை,கேள்வி நெகிழ்ச்சி, நிரம்பல் நெகிழ்ச்சி எல்லாமே ஒரே பெறுமதியுடையதாகக் காணப்படும்.
(5) கேள்வி நெகிழ்ச்சியும் நிரம்பல் நெகிழ்ச்சியும் சமமாகக் காணப்படும் அதேவேளை உற்பத்தியாளர் மிகையும் ,நுகர்வோர் மிகையும் சமமாகக் காணப்படும்.

**39.** தேயிலைக்கும் கோப்பிக்குமிடையே குறுக்குநெகிழ்ச்சி+2 எனின் தேயிலையின் விலை 20/- விலிருந்து 30/- ஆக மாற்றமடையுமாயின் கோப்பியின் கேள்வியுயர்வு எவ்வளவு
(1) 20%அதிகரிக்கும்
(2) 20%குறைவடையும்
(3) 75%அதிகரிக்கும்
(4) 75%குறைவடையும்
(5) 100%அதிகரிக்கும்

**40.** கூற்று 1 விலைசார் கேள்வி நெகிழ்ச்சி ஒன்றைக் காட்டிலும் அதிகம் எனின் விலை அதிகரிக்கும் போது உற்பத்தி செலவு குறைவடையும்.
கூற்று 2 வருமானம் சார் கேள்வி நெகிழ்ச்சி இழிவுப் பொருட்களுக்குப் பூச்சியமாகும்

கூற்று 3 குறுக்கு கேள்வி நெகிழ்ச்சி நேர்க்கணியமாயின் அவை பிரதியீட்டுப் பண்டமாகும்.
மேலுள்ள கூற்றுக்களில்,

(1) கூற்று 1 சரி (2)கூற்று 2 சரி (3) கூற்று 3 சரி
(4) கூற்றுக்கள் அனைத்தும் சரி (5)கூற்றுக்கள் அனைத்தும் பிழை

**41**

| P | Qd |
|---|---|
| 70 | 60 |
| 60 | 120 |
| 50 | 180 |
| 40 | 240 |
| 30 | 300 |

இங்கு தரப்பட்ட தரவுகளின் அடிப்படையில் இப்பண்டத்தின் விலை சார் கேள்வி நெகிழ்ச்சி ஒருமை நெகிழ்ச்சி எவ்விலையில் ஆகும்.
.
(1) 70 ரூபா (2) 60 ரூபா
(3) 50 ரூபா (4) 40 ரூபா
(5) 30 ரூபா ற்கு கீழ்

**42.** சந்தை சமநிலையிலையில் உள்ள போது கேள்விக்கோடு D ஆகவும் நிரம்பல் கோடு S ஆகவும் காணப்பட்டது. இது S-S1 எனவும் D-D1 எனவும் நகர்வடைந்து புதிய சமநிலை உருவாவதை வரைபு காட்டுகின்றது.




மேற்படி நகர்வுக்கு காரணமாக அமையக் கூடியது பின்வருவனவற்றுள் எது
(1). உற்பத்திக்காரணியின் விலையில் ஏற்படும் அதிகரிப்பும் நுகர்வோன் விருப்புரிமையில் ஏற்படும் குறைவும்.
(2) உற்பத்திக்காரணியின் விலையில் ஏற்படும் குறைவும் நுகர்வோன் விருப்புரிமையில் ஏற்படும் குறைவும்.
(3)உற்பத்திக்காரணியின் விலையில் ஏற்படும் குறைவும் நுகர்வோன் விருப்புரிமையில் ஏற்படும் அதிகரிப்பும்.
(4) உற்பத்திக்காரணியின் விலையில் ஏற்படும் அதிகரிப்பும் நுகர்வோன் விருப்புரிமையில் ஏற்படும் அதிகரிப்பும்
(5) உற்பத்திக்காரணியின் விலையில் ஏற்படும் அதிகரிப்பும் நுகர்வோன் விருப்புரிமை மாறாதிருத்தலும்.

**43.** குறித்த பண்டத்தின் விலைசார் நிரம்பல் நெகிழ்ச்சி +.0.8விலை 800ரூபாவாகக் காணப்பட வாராந்தம் 200 அலகுகள் விற்பனை செய்யப்படுகின்றது.தற்போது விலை 1000ரூபாவாக அதிகரிப்பின் வாராந்தம் நிரம்பல் செய்யும் அளவானது
(1) 180 அலகுகளாகக் குறைவடையும்
(2) 250 அலகுகளாக அதிகரிக்கும்
(3) 240.அலகுகளாக அதிகரிக்கும்
(4) 360 அலகுகளாக அதிகரிக்கும்
(5) 160 அலகுகளாகக் குறைவடையும்

**44.** குறித்த பண்டத்தின் சகல விலைகளிலும் விலைசார் கேள்வி நெகிழ்ச்சி அலகு நெகிழ்ச்சியாகக் காணப்படுகின்றது விலையில் ஏற்படும் ஒரு அதிகரிப்பானது?
(1) நிரம்பல் செயயப்படும் அளவில் மாற்றத்தினை ஏற்படுத்தாது.
(2) நுகர்வோன் மொத்தச் செலவில் மாற்றத்தினை ஏற்படுத்தாது
(3) பொருள் மீதான செலவில் சமஅளவு குறைவினை ஏற்படுத்தும்
(4) நுகர்வோன் செலவு அதிகரிப்பு வீதத்திற்கமைய உற்பத்தியின் வீதமும் அதிகரிக்கும்.
(5) பொருளுக்கான கேள்வியில் மாற்றங்கள் ஏற்படாது

**45.** சந்தைச் சமநிலையொன்றின் நிபந்தனை தொடர்பாகத் தவறான கூற்று
(1) எதிர்ப்பார்க்கப்படும் கேள்வி விலையும் எதிர்ப்பார்க்கப்பட்ட நிரம்பல் விலையும் சமனாக அமைய வேண்டும்.
(2) எதிர்ப்பார்க்கப்படும் கேள்வித் தொகையும் எதிர்ப்பார்க்கப்பட்ட நிரம்பல் தொகையும் சமனாக அமைய வேண்டும்.
(3) மிகைக் கேள்வித் தொகையும் மிகை நிரம்பல் தொகையும் பூச்சியமாக அமைய வேண்டும்.
(4) மிகைக் கேள்வி விலையும் மிகை நிரம்பல் விலையும் காணப்படாது

(5) சந்தைக் கேள்வியின் உயர்ந்த பட்ச விலையைக் காட்டிலும் நிரம்பலாளர் எதிர்பார்க்கும் ஆகக் குறைந்த விலை உயர்வாகக் காணப்படும.

**46.** காரின் விலையில் ஏற்பட்ட குறைவின் காரணமாக பெற்றோலுக்கான கேளவி 20%. ஆல் அதிகரித்தது. காருக்கும் பெற்றொலுக்குமாக குறுக்கு விலைக் கேள்வி நெகிழ்ச்சி –2.காரின் விலையில் ஏற்படும் மாற்றமானது?

| | இருந்து (from) | நோக்கி(to) |
|---|---|---|
| (1) | ரூபா6000 | ரூபா5500 |
| (2) | ரூபா 6000 | ரூபா5000 |
| (3) | ரூபா5500 | ரூபா4500 |
| (4) | ரூபா5000 | ரூபா4500 |
| (5) | ரூபா5000 | ரூபா4000 |

**47.** குறித்த பண்டத்தன் கேள்விச் சமன்பாடு $Q_d = 310 - 20p$நிரம்பல் சமன்பாடு $Q_s = 10 + 10\ p$,இங்கு p என்பது குறித்த பண்டத்தின் விலையினைக் குறித்து நிற்கின்றது.இச் சந்தையின் சமநிலை விலை மற்றும் நுகர்வோன் மிகை என்பவற்றைச் சரியாகக் காட்டுவது ?

| | சமநிலை விலை | நுகர்வோன் மிகை |
|---|---|---|
| (1) | ரூபா10.66 | ரூபா 266.20 |
| (2) | ரூபா5 | ரூபா1102.50 |
| (3) | ரூபா 10 | ரூபா302.50 |
| (4) | ரூபா 15 | ரூபா 266.20 |
| (5) | ரூபா 20 | ரூபா302.50 |

**48.** பின்வருவனவற்றுள் மிகைக் கேள்வி விலை என்பதனைச் சரியாகக் குறிப்பிடுவது.
(1) குறித்த அலகுத் தொகைகளின் கீழ் நிரம்பல் விலைக்கு மேலாகக் கேட்கப்படும் விலை
(2) உற்பத்தியாளன் எதிர்பார்க்கும் ஆகக் குறைந்த விலையிலும் குறைவான விலை
(3) உற்பத்தியாளன் எதிர்பார்க்கும் ஆகக் குறைந்த விலையிலும் உயர்வான விலை
(4) நுகர்வோன் செலுத்தத் தயாரான உச்ச விலையிலும் குறைவான விலை
(5) விற்ற விலைக்கும் விற்க எதிர்பார்த்த விலைக்குமிடையேயான வித்தியாச விலை

**49.** சமநிலை விலை அதிகரிக்க ஏதுவான சந்தர்ப்பம் பின்வருவனவற்றுள் எது
(1) நிரம்பல் மாறாதிருக்க கேள்வி அதிகரித்தல்
(2) கேள்வி மாறாதிருக்க நிரம்பல் அதிகரித்தல்
(3) கேள்வியும் நிரம்பலும் சமவீதத்தால் அதிகரித்தல்
(4) கேள்வியும் நிரம்பலும் சமவீதத்தால் குறைவடைதல்
(5) நிரம்பல் அதிகரிக்கும் வீதத்தைக் காட்டிலும் கேள்வி அதிகரிக்கும் வீதம் அதிகமாக இருத்தல்

**50.** நுகர்வோன் மிகை 2000 ரூபா உற்பத்தியாளன் மிகை 3000 ரூபா எனின் பொருளாதார மிகை யாது?
(1) - 1000 ரூபா (2) 1000 ரூபா (3) 2000 ரூபா (4) 3000 ரூபா (5) 5000 ரூபா

---

சந்தைச் சமநிலையையுடன் தொடர்புடைய அட்டவணை வருமாறு

| கேள்வி மாதம் ஒன்றுக்கு | | நிரம்பல் மாதம் ஒன்றிற்கு | |
|---|---|---|---|
| P | Qd | P | Qs |
| $ | (000’) | $ | (000’) |
| 18 | 19.0 | 21 | 21.0 |
| 19 | 17.5 | 20 | 19.0 |
| 20 | 15.0 | 19 | 17.5 |
| 21 | 12.0 | 18 | 15.0 |
| 22 | 8.5 | 17 | 12.0 |

சமநிலை விலை, தொகை யாது?
(1) 18, 19000
(2) 17, 17500
(3) 20, 15000
(4) 21, 12000
(5) 22, 8500

-இவை சுயபயிற்சிக்கான வினாக்களே மீண்டும் மீண்டும் முயற்சி செய்யவும் -